## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **M.C.O.P. No. 2/2020** | **Date : 25.10.2024** | **PW1** |
| Name: புஷ்பராஜ் | த/பெ. சேவியர் | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் எனது அம்மா புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எனதுஅம்மா விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல்செய்துள்ள ம.சா.ஆ.4 ஆவணமான மருத்துவ ரசீது ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். மேற்படி மருத்துவ ரசீதில் குறிப்பிட்டுள்ள தொகையை நான் Star Health தில் பெற்றதாக Star Health நிறுவனத்தின் பெயர் ம.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணத்திற்கு பிறகு நான் மருத்துவ செலவு செய்தது குறித்து ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஈரோடு சுதா மருத்துவமனையின் மருத்துவ ரசீதுகள் மட்டும் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது குறித்து நான் இழப்பீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. நான் ஹெல் மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. அணிந்திருந்தேன். நான் சிகிச்சை முடிந்து மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டேன் என்றும் நான் பூரணமாக குணமடைந்து விட்டேன் என்றும் எனக்கு ஊனம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் தற்போது என்னவேலை செய்கிறேன் என்றால் ஒப்பந்த பணியாளராக பாய்லர் சம்மந்தமாக வேலை செய்து வருகிறேன். எனது வயது, வருமானம், தொழில் தொடர்பான விவரங்களை காண்பிக்க ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வெளிநாட்டில் பணி செய்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் வருமானவரி செலுத்துவதில்லை என்றால் சரியல்ல. 2017 ம் வருடம் வரைவருமான வரி செலுத்தியுள்ளேன். அதன்பிறகு செலுத்தவில்லை. 2017 ம் வருடத்திற்கு பிறகு நான் வருமான வரி செலுத்தாத காரணத்தினால்தான் எனது மனுவில் 7 வது வரிசையில் வருமான வரி செலுத்தவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு நானும் காரணம் என்பதால் நஷ்டஈடு தொகை கணக்கீடு செய்யும் போது என்னுடைய அஜாக்ரதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்

என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை**

ஒம்/—புஷ்பராஜ்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.